கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி.,யின் புதுதில்லி நேர்முக உதவியாளர் அ.தர்மலிங்கம் நேற்று சென்னை தனியார் மருத்துவமனையில் உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார். திருச்சி மாவட்டம், பெருகமணி கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு ஆ.இராசா.எம்.பி., நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் எம்.பழனியாண்டி, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், கழக சட்ட திட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் ம.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லத்தம்பி, சி.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

வண்டலூர் உயிரியல் பூங்காவில் விலங்குகளுக்கு கூடுதல் பழங்கள்!

சென்னை, அக்.31-

சென்னை வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ஏராளமான விலங்குகள், பறவைகள் உள்ளன. தற்போதைய நிலவரப்படி அங்கு 172 இனங்களைச் சேர்ந்த 2,368 உயிரினங்கள் உள்ளன. இங்குள்ள பெரும்பாலான விலங்குகளுக்கு பழங்கள் உணவாக வழங்கப்படுகின்றன.

இந்நிலையில் வண்டலூர் உயிரியல் பூங்காவில் உள்ள விலங்குகளுக்கு உணவாக கூடுதலாக பழங்கள் வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாட்டில் நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி ஈரோடு தெற்கு மாவட்ட கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு சார்பில் மாநகரக் கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியன் தலைமையில் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் என்.ஏ.அயூப் முன்னிலையில் மாநகரம் சுல்தான் பேட்டை பள்ளிவாசலில் இஸ்லாமியர்களிடம் நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. நிகழ்வில் கோட்டை பகுதி கழக செயலாளர் பொ. ராமச்சந்திரன், போக் சேட்டு, குத்தூஸ் ஜியாபுதீன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சேலம் மத்திய மாவட்டத்தில் பொறுப்பாளர்கள் நியமனம்!

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சேலம், நவ. 1-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

18வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்கள் வாக்களிக்க தகுதியேற்படுத்தும் நாளாக 01.01.2024 கொண்டு இந்திய தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வாக்காளர் பட்டியலை வெளியிட்டு உள்ளது.

வாக்காளர்கள் பட்டியலில் பெயர்களை சேர்க்கவும், நீக்கவும், திருத்தம் செய்யவும் 27.10.2023 முதல் 09.12.2023 வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களாக 04.11.2023 சனிக்கிழமை, 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை மேலும் 18.11.2023 சனிக்கிழமை, 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் நடைபெற உள்ளது.

புதிய வாக்காளர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாதவர்கள் பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள், இறந்தவர்கள் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும்.

இந்த பணிகளில் மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக, வார்டு கழக, கிளைக் கழக செயலாளர்கள் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டும். இந்த பணிகளில் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA2) வாக்குச்சாவடி அளவிலான குழு உறுப்பினர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில் கழக நிர்வாகிகளோடு, பாக நிலை முகவர்களோடு (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்களோடு (BLC) கீழ்க்காணும் நிர்வாகிகள் சிறப்பு கவனம் செலுத்தி மேற்பார்வையிட்டு வாக்காளர் சரி பார்த்தல் பணியினை முழுமையாக நிறைவேற்றிட பணியாற்று வார்கள் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மத்திய மாவட்ட
தி.மு.க

பகுதி கழக / ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் விவரம் வருமாறு

அஸ்தம்பட்டி பகுதி - K.T.மணி - தலைமை செயற் குழு உறுப்பினர் -

விமல் ராஜ் (எ) மோசஸ் - தகவல் தொழில் நுட்ப அணி, இம்தியாஸ் - சிறுபான்மை நல பிரிவு, அயூப் - சிறுபான்மை நலபிரிவு

அரிசிபாளையம் பகுதி, பா.ரகுபதி- மாநகர செயலாளர் - அமான்(எ) நாசர்கான் பொதுக்குழு உறுப்பினர், முபாரக் - மாநகர தலைவர் சிறுபான்மை நல பிரிவு, கார்பெட் S.P. மணி - மாநகர அமைப்பாளர் ஆதி திராவிடர் நல அணி

அம்மாபேட்டை பகுதி - லோகு (எ) லோகநாதன் - பொதுக்குழு உறுப்பினர், V.மாதையன் - மாநகர துணை அமைப்பாளர் நெசவாளர் அணி, A.C.பாரதிராஜா - மாநகர அமைப்பாளர் விவசாய அணி, V.P.சிங் - மாநகர துணை அமைப்பாளர் விவசாய அணி, N.ஆறுமுகம் மாநகர துணை அமைப்பாளர் வர்த்தகர்அணி

பொன்னம்மா பேட்டை பகுதி - K.R.முருகன் - மாநகர அவைத் தலைவர், M.M.சௌபீ - மாநகர பொருளாளர், S.சிவா(எ) சிவசுப்ரமணி - மாநகர அமைப்பாளர், தொழிலாளர் அணி, K.M.பெருமாள் - மாவட்ட பிரதிநிதி K.K.மாதேஸ்வரன் - பகுதி பொருளாளர்

செவ்வாய்பேட்டை பகுதி - அமான்(எ) நாசர்கான் - பொதுக்குழு உறுப்பினர், பா.ரகுபதி - மாநகர செயலாளர், சுஹைல் ரஹ்மான் - மாநகர இளைஞர் துணை அமைப்பாளர், அஜ்மல்கான் - மாநகர அமைப்பாளர் சிறுபான்மையினர் நலப்பிரிவு அணி

தாதகாப்பட்டி பகுதி - பெ.அசோகன் - பொதுக்குழு உறுப்பினர், O.Tex இளங்கோ - மாநகர அமைப்பாளர், நெசவாளர் அணி, சதீஷ்குமார் - மாநகர துணை அமைப்பாளர் விவசாய தொழிலாளர் அணி, S.பூபதி - (எ)பெஸ்ட் பூபதி மாநகர அமைப்பாளர் பொறியாளர் அணி

கொண்டலாம்பட்டி பகுதி - G.K.சுபாசு - அவைத் தலைவர், P.L.பழனிசாமி - மாநகர அமைப்பாளர் வர்த்தகர் அணி, சிவராஜ் - மாநகர துணை அமைப்பாளர் மாணவர் அணி,

குகை பகுதி - G.குமரவேல்- மாவட்ட துணைச் செயலாளர், கோகுல் காளிதாஸ் -மாவட்ட மாணவர் அணி, சாகுல் அமீது மாநகர அமைப்பாளர் அயலக அணி

குமாரசாமிப்பட்டி பகுதி - கேபிள் சரவணன் மாநகர அமைப்பாளர்இளைஞர் அணி, N.ஜெகன்நாதன் முன்னாள் இளைஞர் அணி து.அ, தா.ஆனந்தகண்ணன் - மாநகர அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டுஅணி

சூரமங்கலம் பகுதி - கு.கீ.வெ.தாமரைக் கண்ணன் - தலைமை செயற்குழு உறுப்பினர், ஜே.தினகரன் - மாநகர துணை செயலாளர், அ.அன்புக்கரசு - மாவட்ட அமைப்பாளர்விளையாட்டு மேம்பாட்டு அணி, ரத்தினவேல் - மாவட்ட தலைவர் வர்த்தகர் அணி

மெய்யனூர் பகுதி - சா.சுப்ரமணி - பொதுக்குழு உறுப்பினர், கருங்கல்பட்டி சந்திரன் - மாநகர துணை அமைப்பாளர் விவசாய தொழிலாளர் அணி, இளந்திரையன் - மாவட்ட அமைப்பாளர் கலை இலக்கிய பகுத் தறிவு பேரவை

அழகாபுரம் பகுதி - திரு மதி.மஞ்சுளா மாவட்ட துணைச் செயலாளர், திரு மதி.கோமதி - மாநகர துணைச் செயலாளர், எம்.சீனிவாசன் - மாவட்ட அமைப்பாளர் மீனவர் அணி, K.R.நந்தகுமார் மாவட்ட அமைப்பாளர் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி

கிச்சிப்பாளையம் பகுதி - V.கணேசன் - மாநகர துணைச் செயலாளர், S.R.அன்வர் - மாநகர சிறுபான்மை அமைப்பாளர், தேவிபாலன் - மாநகர அமைப்பாளர் மகளிர் தொண்டரணி, S.அருணாசலம் - மாநகர மீனவர் அணி தலைவர், T.சந்திரசேகர் - மாவட்ட தலைவர் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி

கடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம் - செ.குபேந்திரன் - பொதுக்குழு உறுப்பினர், Dr.L.அருள் - மாவட்ட அமைப்பாளர் மருத்துவர் அணி, G.நாகராஜ் - மாவட்ட அமைப்பாளர்பொறியாளர் அணி

கடையாம்பட்டி மேற்கு ஒன்றியம் - K.R.கருணாகரன் - பொதுக்குழு உறுப்பினர், நைனாகுமார் கிளைச்செயலாளர், சின்னத்திருப்பதி, காருவள்ளி, K.ஜெயக்குமார் - மாவட்ட அமைப்பாளர் தகவல் தொழில் நுட்ப அணி,

ஓமலூர் கிழக்கு ஒன்றியம் - மு.கார்த்திகேயன் பொருளாளர், S.அழகிரி மாவட்ட அமைப்பாளர் விவசாய தொழிலாளர் அணி

ஓமலூர் வடக்கு ஒன்றியம் -மு.கார்த்திகேயன் - பொருளாளர், க.ராம்பிரகாஷ் - மாவட்ட அமைப்பாளர்வழக்கறிஞர் அணி, சிவஞானவேல் - மாநகர து.அமைப்பாளர் வழக்கறிஞர், ரவிச்சந்திரன்- ஓமலூர் பேரூர் செயலாளர், ரவிக் குமார் -ஆடிட்டர்

ஓமலூர் தெற்கு ஒன்றியம் - சி.இராஜேந்திரன் - தலைமைச் செயற்குழு உறுப்பினர், அருமை சுந்தரம் - முன்னாள் மாவட்ட கவுன்சிலர், சம்பு(எ)சண்முகம் - மாவட்ட கவுன்சிலர், அருண்பிரசன்னா - மாவட்ட அமைப்பாளர் இளைஞர்அணி வெங்கடேஷ் - ஒன்றிய துணை செயலாளர், R.கோபல்சாமி - ஒன்றிய கவுன்சிலர்

தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம் - ப.குப்புசாமி பொதுக்குழு உறுப்பினர், S.திருநாவுக்கரசு- மாவட்ட துணைச் செயலாளர், M.ராஜா - மாவட்ட பிரதிநிதி G.சிலம்பரசன் - மாவட்ட து. அமைப்பாளர் மாணவர் அணி, புவனேஸ்வரன் - மாவட்ட அமைப்பாளர் நெசவாளர்அணி

சேலம் வடக்கு ஒன்றியம் - அ.பூபதி - பொதுக்குழு உறுப்பினர், K.ராஜா - மாவட்ட அமைப்பாளர் விவசாய அணி, K.M.ராஜா - மாவட்ட பிரதிநிதி

இவ்வாறு இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணிகளில்

மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

நாகை, நவ.1 -

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின் படி விரைவில் வர இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் மயிலாடுதுறை, பூம்புகார், சீர்காழி தொகுதியில் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள தொகுதி பொறுப்பாளர்கள் மயிலாடுதுறை ஜித்து (எ) ராஜரத்தினம், பூம்புகார் என்.இளையராஜா, சீர்காழி மன்னை சோழராஜன் ஆகியோரின், மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள ஒவ்வொரு வாக்குச்சாவடி (பூத்) வாரியாக அந்தந்த வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, மகளிர் அணி ஆகியநபர்களை உள்ளடக்கிய 100 வாக்காளர்களுக்கு ஒருவர் வீதம் ஒவ்வொரு பூத்திற்கும் பூத் கமிட்டி (பி.எல்.சி.) அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 4.11.2023, 5.11.2023, 18.1.2023, 19.11.2023 ஆகிய நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாக்காளர் சிறப்பு சேர்க்கை முகாம் நடைபெற உள்ளதால் மாவட்டக் கழகத்தின் சார்பில் கண்காணிப்பு குழு

அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தலைமைக் கழகம் சார்பில் தொகுதி பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முகாம் நடைபெறும் நாளான நவம்பர் 4,5,18,19 ஆகிய தேதிகளில் அவர்களை முகாமிற்கு நேரில் சம்பந்தப்பட்ட வாக்குச்சவாடிக்கு அழைத்துச் சென்று அவர்கள் பதிவினை உறுதி செய்வதுடன், முகாம் நடைபெறும் நாட்களில் வாக்குச் சாவடிக்கு சென்று படிவம் 6 ஏ மற்றும் 7, 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து பூத்திற்கு தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளஅலுவலரிடம் வழங்கிட வேண்டும். மேலும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள பூத்களில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள கழக ஆதரவு வாக்காளர் குறித்தும், பெயர் நீக்கம் குறித்தும் தலைமைக் கழகத்திற்கு தெரிவித்திடும் வகையில் பட்டியலை மாவட்டக் கழகத்திடம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் வாக்காளர் சேர்த்தல், திருத்தம் மற்றும் நீக்கம் குறித்து தங்கள் பகுதியை சேர்ந்த தாசில்தார் அலுவலகத்தில் 27.10.2023 முதல் 12.12.2023 வரை படிவங்களை வழங்கலாம். இந்த பணிகள் குறித்து ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர் தங்களது கிளை, வார்டு கழக நிர்வாகிகள் மற்றும் பி.எல்.ஏ.2., பி.எல்.சி, நிர்வாகிகளிடம் எடுத்து கூறி வாக்காளர் பட்டியல் திருத்த பணியை சிறப்பாக செய்திட வேண்டும். இவ்வாறு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.

தஞ்சை வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி சிறப்புரையாற்றினார். அருகில் அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன், தொகுதி பொறுப்பாளர்கள் உ.மதிவாணன் (பாபநாசம்), எஸ்.கே.வேதரெத்தின் (திருவிடைமருதூர்), மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, க.நசீர்முகமது, ஜெ.நடராஜன், குடந்தை மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழ் கலைஞர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் 100

நவம்பர் 2023 மாத நிகழ்வுகள் 10

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

வ.எண்	நிகழ்ச்சிகள்	நிகழ்ச்சி ஏற்பாடு	தலைமை	சிறப்பு அழைப்பாளர்கள்
1. 02/11/23 09.00AM	தலைவர் கலைஞர் எழுதிய "சேரன் செங்குட்டுவன்" நாடகம் மீண்டும் அரங்கேற்றம்	மாவட்ட, மாநகர நிர்வாகிகள்	இரா.மூக்கன், வீலா வேலு, பொன்செல்லையா, வி.சரோஜினி	அன்பகம் கலை கழக இணை அமைப்பு செயலாளர்
2. 03/11/23 09.00AM	சட்ட கல்லூரியில் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி தலைப்பு : மாநில சுயாட்சி, அரசியல் சட்ட மாண்புகளை காப்போம்	மாவட்ட, மாநகர வழக்கறிஞர் அணி	கே.ஏ.வி.தினகரன் மாவட்ட அமைப்பாளர் எம்.பன்னீர்செல்வன் மாநகர அமைப்பாளர்	என்.ஆர்.இளங்கோ.M.A.B.L., M.P மாநில அணி செயலாளர்
3. 04/11/23 06.00PM	தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம்	வார்டு எண் - 39,39A திருவெறும்பூர் பகுதி	ஐ.செல்வராஜ் வினோத் கனகராஜ்	தமிழ்.க.அமுதரசன் தலைமை கழக பேச்சாளர்
4. 05/11/23 06.00PM	தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம்	வார்டு எண் -12,12A மலைக்கோட்டை பகுதி	ஜெ.சிவகுமார் பி.ஜெயச்சந்திரன்	தமிழ். சாதிக் தலைமை கழக பேச்சாளர்
5. 18/11/23 08.00AM	மாவட்ட கழகம் சார்பில் திருச்சி கிழக்கு தொகுதியில் கழக கொடியேற்றுதல், மற்றும் தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் வகையில் அணிகளுக்கு கருத்துரை வழங்கும் விழா	திருச்சி தெற்கு மாவட்ட கழகம்	மாவட்ட கழக செயலாளர்	மாண்புமிகு க. துரை முருகன் கழக பொதுச்செயலாளர் 23 கழக சார்பு அணிகளுக்கு கருத்துரை வழங்குதல் (மாவட்டம் / மாநகரம்)
6. 19/11/23 09.00AM	தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் திரைப்பட கலைஞர்கள் பங்கேற்கும் கருத்தரங்கம்	மாவட்ட, மாநகர தொண்டர் அணி	என்.ஏ.உதயகுமார் மாவட்ட அமைப்பாளர் ஆ.தினகரன் மாநகர அமைப்பாளர்	பெ.சேகர் மாநில அணி செயலாளர் கருத்தரங்கம் திரைப்பட நடிகர். தம்பி ராமையா
7. 19/11/23 06.00PM	தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம்	வையம்பட்டி தெற்கு ஒன்றியம்	வி.ஏ.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர்	மாண்புமிகு.மா.சுப்பிரமணியன் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர்
8. 26/11/23 07.00AM	திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் 11 ஊராட்சிகளில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கல்வெட்டு திறப்பு மற்றும் கொடியேற்று விழா	திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம்	கே.எஸ்.எம்.கருணாநிதி ஒன்றிய செயலாளர்	மாவட்ட கழக செயலாளர்
9. 26/11/23 06.00PM	தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம்	கலைஞர் நகர் பகுதி கழகம்	ஜி.மணிவேல் பகுதி செயலாளர்	மாண்புமிகு.எ.வ.வேலு திருவண்ணாமலை தெற்கு மாவட்டகழக செயலாளர் தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர்
10. 28/11/23 06.00PM	தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம்	வார்டு எண் - 17,17A மார்க்கெட் பகுதி	எஸ்.மனோகரன் ஆர்.எம்.சுப்ரமணியன்	மண்ணை.இளங்கோ தலைமை கழக பேச்சாளர்

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர்

அமைச்சர் சு.முத்துசாமி சம்பந்தி வி.கே.தங்கவேல் மறைவு!

கழகத்தினர் நேரில் அஞ்சலி!

ஈரோடு, நவ.1-

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகசெயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறைஅமைச்சருமான சு.முத்துசாமியின் மகன் ராஜாவின் மாமனார் கோபி மூலவாய்க்கால் வி.கே.தங்கவேல் 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணியளவில் இயற்கை எய்தினார்என்கிறசெய்தியினை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு யசோதா என்கிறமனைவியும், கிருத்திகா பெரியநாயகி என்கிற மகளும் உள்ளனர்.

அன்னாரின்மறைவுச்செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், அனைத்துக் கட்சிப்பிரமுகர்கள்அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நேற்று முன்தினம் (30.10.2023 - திங்கட்கிழமை) மதியம் 3 மணியளவில் கோபி மூலவாய்க்காலில் உள்ள அவரதுஇல்லத்தில்நடைபெற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

திருப்பூர் மாநகராட்சி ஜெய்வாபாய் மாதிரி நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் 2023–2024 ஆண்டுக்கான மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், துணை மேயர் ரா.பாலசுப்பரமணியன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ந.கீதா, கல்விக்குழுத் தலைவர், பெ.திவாகரன், மாவட்ட கல்வி அலுவலர் மு.பக்தவச்சலம், வடக்கு மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, பொங்கலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.பாலுசாமி, பகுதி செயலாளர்கள் கொ.ராமதாஸ், மியாமி ஆ.அய்யப்பன், வட்டக் கழக செயலாளர் பொ.ஆனந்த், கட்டுமான தொ.மு.ச. பி.எஸ்.பாண்டியன், மீனவரணி கருணாகரன் உள்ளிட பலர் உள்ளனர்.